# பத்து கன்னிகைகள் 2





**சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்**

**(படங்களுடன்)**

## மத்தேயு 25:1-13

1. அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்.

2. அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்.

3. புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள்,

எண்ணெயையோ கூடக்கொண்டுபோகவில்லை.

4. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்.

5. மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.

6. நடுராத்திரியிலே: இதோ மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப்புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

7. அப்பொழுது அந்தக் கன்னிகைகள் எல்லாரும்

எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.

8. புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங்கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள்.

9. புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள்.

10. அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.

11. பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள்.

12. அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

13. மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.



அவர்கள் என்ன செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் தங்கள் விளக்குகளில் எண்ணெயைப் பெற முயற்சித்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படியே தான் நடக்கிறது. அது ஒரு கடைசி கால வித்தின் அடையாளமாயிருக்கிறது. ஆமென். அவள் அவ்வாறு செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கையில், மணவாளன் வருகிறார், அவரோடு மணவாட்டி உள்ளே செல்கிறாள், இவளோ அடைக்கப்பட்ட கதவுக்கு புறம்பே இருக்கிறாள். ஓ, எப்பேர்ப்பட்ட அற்புதமான நாளில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 62-03-19 கடைசி கால வித்தின் அடையாளம்

70. தேவனுடைய வார்த்தையைத் தவிர, வேறு எந்த ஒன்றினாலும் சபை விதைக்கப்பட்டிருந்தால், அதனால் அவரைச் சந்திக்க இயலாமற் போகும். மனம் போன போக்கில் நடக்கும். காளான் முளைத்த சரீரம் அவருக்கு இல்லை. அவருக்கு பரிபூரணமான சரீரமே உண்டு, அவரே பரிபூரண

வார்த்தையாயிருக்கிறார். சபையில் வார்த்தையானது விதைக்கப்பட்டு, அது பரிபூரண வார்த்தையில் விசுவாசம் கொண்டிருக்கும். பரிபூரண வார்த்தையும், பரிபூரண வார்த்தையும் ஒரே மாமிசமாகவும் ஒரே சரீரமாகவும், கணவன் மனைவியாக ஒன்றாக இணையும். ஆமென். நான், எனக்கு ஆமென் என்று கூறவில்லை. ஆனால் ஆமென் என்பதற்கு, அவ்வாறே ஆகட்டும் என்று அர்த்தமாம். எப்படியாயினும் நான் அதை விசுவாசிக்கிறேன். ஆம் ஐயா.

முன் மாரியானது பொழிந்து முடிந்துவிட்டது. மழையானது பொழிவதற்கு ஆயத்தமாயுள்ளது அது எதைப் பிறப்பிக்கப் போகிறது? நீங்கள் அதைக் கவனியுங்கள்.

71. இன்னுமொரு அடையாளம்: புத்தியில்லாத கன்னியரை பற்றியது. ஓ, இயேசு கூறினார், மணவாளன் வருவதற்கு முன்னர், அநேக புத்தியுள்ள கன்னியரும், புத்தியில்லாத கன்னியரும் இருப்பார்கள் என்று, ஒரு நாளிலே, புத்தியில்லாத கன்னியர் விழித்தெழுந்து, தன் தீவட்டியில் எண்ணெய் இல்லை என்பதை

கண்டு கொள்ளுவாள். அப்பொழுது, “இதோ மணவாளன் வருகிறார்” என்ற சப்தம் புறப்பட்டுச் செல்லும். (மத்தேயு 25:1–13). இப்பொழுது அச்சப்தம் தான் நடந்து கொண்டிருக்கிறது. “கிறிஸ்து வருகிறார்” அவள் விழித்தெழுந்து தன்னிடம் எண்ணெய் இல்லை என்பதைக் கண்டு கொண்டாள்.

எண்ணெய் என்றால் ஆவி என்று அர்த்தமாம். ஆவியே, வார்த்தையை உயிர்ப்பிக்கிறது. ஆவியே வார்த்தையை உயிர்ப்பிக்கும் தண்ணீராயுள்ளது.

அதை வெளியே எறிந்துவிடுங்கள். "நல்லது, இந்த சபைகளைக் குறித்து என்ன? என்று நீங்கள் கேட்கலாம், அவர்கள் ஸ்தாபன வித்தை விதைத்தால், அது அதையும் கூட உயிர்ப்பிக்கும். தேவனுடைய ஆவி அதையும் உயிர்ப்பிக்கும்.

72. "...நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார். (மத்தேயு 5:45). எபிரெயர் 6ம் அதிகாரம் கூறுவதென்னவெனில் மழையானது பூமியின் மேல் பயிரை முளைப்பிக்கத் தக்கதாக அடிக்கடி

பெய்கிறது என்று. முட்செடிகளும், முட்பூண்டுகளுங்கூட தன் மேல் பெய்யும் மழையைக் குடித்து, அவைகளுங்கூட களி கூருகின்றன. ஆனால் "அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்கள்..." (மத்தேயு7:16). அது சரியாக அவ்வாறே இருக்கிறது. அது அப்படிதான் உள்ளது. அவர்கள் அதைக் கண்ட போது... பாருங்கள், கனிகள் சேர்க்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. மழையானது பொழியப்பட ஆயத்தமாயுள்ளது. ஸ்தாபனமானது ஸ்தாபனத்தையே பிறப்பிக்கும். அது அவ்வளவுதான்.

ஆனால் வார்த்தையோ, கிறிஸ்துவை – மணவாட்டியைப் பிறப்பிக்கும். நிச்சயமாக. வார்த்தை என்னும் வித்தை விதையுங்கள். இப்பொழுது, புத்தியுள்ள கன்னிகையோ

73. “கிறிஸ்தவ வியாபாரிகளின் சப்தம்” என்று பத்திரிக்கையை கவனித்தீர்களா? சர்வதேச ரீதியில் நான் அவர்களுக்காக பிரசங்கிக்கிறேன். அவர்களுக்காக நான் கடிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. இது வார்த்தையாயிருக்கிறது. பாருங்கள். பிரெஸ்பிட்டீரியன்கள்,

எபிஸ்கோபாலியன்கள், இன்னும் நூற்றுக்கணக்கான அவர்களைச் சார்ந்த அநேகர் எங்கிலும், பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள தேடிக் கொண்டு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். மகத்தான பெரிய அளவில் அவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆப்பிரிக்காவிலிருந்து உள்ள விலையேறப்பெற்ற எனது ஊழியக்கார நண்பர் ஒருவர் உண்டு. அவர் அருமையான மனிதர், தெய்வீக மனிதர், நான் அவரிடம், “உங்களுடைய

ஊழியமானது என்ன? அது என்னவென்று நீங்கள் அறிவீர்களா? என்று கேட்டேன்.

"நான் பாபிலோனை உள்ளே கொண்டு வர வேண்டியவனாய் இருக்கிறேன்" என்றார்.

அப்பொழுது, நான், "உங்களால் காண முடியவில்லையா? புத்தியில்லாத கன்னியர், தங்களுடைய வித்துக்கள் வளருவதற்கு கொஞ்சம் எண்ணெய் வேண்டுமென்று தேடுகிற அதே சமயத்தில் தான், அந்த வேளையில்தான், கிறிஸ்து வருகிறார் என்றும், அவள்

கைவிடப்படுகிறாள் என்றும் உள்ளதை உங்களால் காண முடியவில்லையா என்று எனக்குள் நினைத்தேன். சமீபத்தில் மகத்தான பிரசங்கியார் பில்லிகிரகாம் அவர்கள், நமக்கு பெந்தேகோஸ்தே தேவையாயிருக்கிறது. மக்களுக்கு மீண்டும் அது தேவையாயிருக்கிறது என்று கூறினார். எபிஸ்கோபாலியன் சபையைச் சேர்ந்தவர்கள் ஒரு பெரிய கட்டுரையை எழுதினார்கள், அதில், "நமக்கு அன்னிய பாஷைகளில் பேசும் பிரசங்கிமார்கள் தேவை, சுகமளித்தல் ஆராதனைகளை நடத்தும், தெய்வீக சுகமளித்தல்

வரம் பெற்றவர்கள் நமது சபையில் தேவை, “வியாதியஸ்தருக்காக ஜெபிக்கிறவர்கள் நமக்குத் தேவை” என்று எழுதியுள்ளார்கள். அவர்கள் என்ன செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் தங்கள் விளக்குகளில் எண்ணெயைப் பெற முயற்சித்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படியே தான் நடக்கிறது. அது ஒரு கடைசி கால வித்தின் அடையாளமாயிருக்கிறது.

ஆமென். அவள் அவ்வாறு செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கையில், மணவாளன் வருகிறார், அவரோடு மணவாட்டி உள்ளே

செல்கிறாள், இவளோ அடைக்கப்பட்ட கதவுக்கு புறம்பே இருக்கிறாள். ஓ, எப்பேர்ப்பட்ட அற்புதமான நாளில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

# அங்கே இயற்கைக்கு மேம்பட்ட ஒரு காரியம் இல்லாவிட்டால்!

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 53-03-25 இஸ்ரவேலும் சபையும் #1

**125.** புறப்பட்டுப் போன அந்த பத்து கன்னிகைகளைக் கவனியுங்கள். ஐந்து பேர்...

அவர்கள் எல்லாருமே கன்னிகைகளாக இருந்தார்கள்.

அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களாக இருந்தார்கள்; ஐந்து பேருடைய தீவட்டிகளில் எண்ணெய் இருந்தது.

எண்ணெய் என்பது என்ன? பரிசுத்த ஆவி. பாருங்கள்? அது சரியே.

அவர்கள் எல்லாருமே கன்னிகைகளாக இருந்து, நல்லவர்களாக ஜீவித்து, சுத்தமான ஜீவியத்தை உடையவர்களாக இருந்தார்கள்.

**126.** நீங்கள், "நல்லது, சகோதரனே, நான் நடன நிகழ்ச்சிகளுக்கும் (dances), காட்சிகளுக்கும் போவதில்லை" என்று கூறலாம். அது வெறுமனே நல்ல நடத்தைக்குரிய காரியமாக உள்ளது. அங்கே இயற்கைக்கு மேம்பட்ட ஒரு காரியம் இல்லாவிட்டால்!

நீங்கள் சத்தமிட்ட காரணத்தினாலோ, நீங்கள் அந்நிய பாஷைகளைப் பேசுகிற காரணத்தினாலோ, நீங்கள் மேலும் கீழும் குதித்த காரணத்தினாலோ, நீங்கள் இதைச் செய்த காரணத்தினாலோ அல்ல; ஆனால் இங்கே உங்களை மாற்றுகிறதும்... வைக்கிறதுமான இயற்கைக்கு மேம்பட்ட ஏதோவொன்று சம்பவித்திருக்கிறது தான் காரியம். நீங்கள் தேவனுக்குள் முத்திரையிடப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் நங்கூரம் பாய்ச்சப்பட்டிருக்கிறீர்கள். அது சரியே.

127. “நல்லது, உங்களுக்கு அதில் விசுவாசமில்லையா?” சத்தமிடுவதை நான் விசுவாசிக்கிறேன், இந்த எல்லா காரியங்களையும் நான் விசுவாசிக்கிறேன், ஆனால் அது (அதற்கான) பதில் அல்ல.

128. மெதோடிஸ்டுகள், தாங்கள் சத்தமிட்ட போது, அதைக் கொண்டிருந்ததாக எண்ணினார்கள், ஆனால் அவர்கள் தவறாக இருந்ததைக் கண்டுகொண்டார்கள்.

அவர்கள் அநேகர் சத்தமிட்டும், அதைக் கொண்டிருக்கவில்லை.

பெந்தெகோஸ்தேகாரர்களும் கூடவே வந்து, அந்நிய பாஷைகளில் பேசி, அவர்கள், “நாங்கள் அவளைப் பெற்று விட்டோம்” என்று கூறினார்கள், ஆனால் அவர்கள் தவறாக இருந்ததைக் கண்டுபிடித்தார்கள்.

அவர்களில் அநேகம் பேர் அந்நிய பாஷைகளில் பேசியும் எதையும் கொண்டிருக்கவில்லை.

“நான் மனுஷர் பாஷையையும் தூதர் பாஷையையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், எனக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை.”

அவர்கள் அதைக் கொண்டிருக்கவில்லை. அது சரியே.

அந்த காரணத்தினால் தான் முழு உலகமும் அதினாலேயும் மற்ற காரியத்தின் மூலமாகவும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறது. அது (அதற்கான) பதில் அல்ல.

மாம்சீகமான எந்த ஆர்ப்பாட்டமோ அல்லது மனக்கிளர்ச்சியோ அல்ல, ஆனால் உங்களுடைய முழு கருத்தையும், உங்களுடைய முழு சுபாவத்தையும் மாற்றுகிற இங்கே உள்ளே சம்பவித்திருக்கிற ஏதோவொன்று.

அப்பொழுது நீங்கள் மனமாற்றமடைந்திருக்கிறீர்கள்; நீங்களல்ல, ஆனால் கிறிஸ்து உங்களுக்குள்ளே வந்து, உங்களை மாற்றியிருக்கிறார். பழைய மனுஷனில், உங்களுடைய சுபாவம் மரித்து விட்டது, நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்கள், நீங்கள் ஒரு புதிய மனுஷனாயிருக்கிறீர்கள். கவனியுங்கள். ஆமென்.

# ஐந்து கன்னிகைகளைக் குறித்த உவமையை விளக்கவும்

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

### செய்தி: 59-06-28E கேள்விகளும் பதில்களும் COD #10

80. இப்பொழுது இங்கே வேறொரு கேள்வி; இது என்னவென்பதை நாம் பார்ப்போம். சரி. **ஐந்து கன்னிகைகளைக் குறித்த உவமையை விளக்கவும். ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்வானா?**

103. இப்பொழுது, ஐந்து கன்னிகைகளைக் குறித்த உவமை – அல்லது அது பத்து

கன்னிகைகளைக் குறித்தது, தயவு கூர்ந்து பொறுத்துக் கொள்ளவும்.

பத்து கன்னிகைகள் மத்தேயு 25:1ல் காணப்படுகின்றனர். பத்து கன்னிகைகள் மணவாளனை சந்திக்கப் புறப்படுகின்றனர் (இப்பொழுது கவனியுங்கள் !) அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களாயிருந்து தங்கள் தீவட்டிகளில் எண்ணெயைக் கொண்டிருந்தனர், ஐந்து பேர் புத்தி இல்லாதவர்களாக தங்கள் தீவட்டிகளில் எண்ணெயைக் கொண்டிராமல் இருந்தனர்.

அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கையில் “இதோ மணவாளன் வருகிறார் அவருக்கு எதிர் கொண்டுப்போகப் புறப்படுங்கள் என்ற சத்தம் – சத்தம் வந்தது.”

தங்கள் தீவட்டிகளில் எண்ணெயை உடையவர்களாக இருந்தவர்கள், தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினர், நெருப்பு எரிந்து கொண்டிருந்தது, அவர்கள் மணவாளனைச் சந்திக்கச் சென்றனர்.

மற்றவர்களோ எண்ணெய் வாங்கிக் கொள்ள இவர்களிடம்

வந்தனர், இவர்களோ நீங்கள் விற்கிறவர்களிடத்திற்கு போய் உங்களுக்காக வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினர்.

அவர்கள் சென்ற போது, மணவாளன் வந்து விட்டார், அப்பொழுது புத்தியுள்ள கன்னிகை உள்ளே பிரவேசித்தாள், தூங்கிக் கொண்டிருந்த கன்னிகை புறம்பே தள்ளப்பட்டாள்.

104. இது உங்களை புண்ப்படுத்தப் போகிறது, உண்மையாகவே புண்படுத்தப்போகிறது, ஆனால் நான் அதை

கூறவேண்டியவனாகவே இருக்கிறேன்.

கேள்வியை நான் கேட்கவில்லை; நான் அதற்கு பதிலளிக்க கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இப்பொழுது, இது மிக நெருக்கமாக வருகிறது, சகோதரனே, மிக நெருங்கி காணப்படுகிறது, இது உங்களை புண்படுத்துவதை விட உங்களுக்கு உதவும் விதத்தில் இருக்கும் என நான் நம்புகிறேன். வழக்கமாக புண்படுதல்....

என் தாயார் என்னை அடிக்கையில் வழக்கமாக இவ்வாறு கூறுவார்கள், “உனக்கு அது நன்மை செய்யும் முன்னர் அது உன்னை புண்படுத்த வேண்டும்” என்பார்கள். நல்லது, அது – அது சரியே. பாருங்கள்? அப்பொழுது என்னால் அதைக் காண முடியவில்லை, ஆனால் நான் – நான் இப்பொழுது அதைக் காண்கிறேன்.

105. கவனியுங்கள், இந்த ... அங்கே புறப்பட்டுச் சென்ற பத்து பேரும் கன்னிகைகள்.

இப்பொழுது, கர்த்தரை சந்திக்கும்படியாக அங்கே பத்து கன்னிகைகள் இருந்தனர்.

இப்பொழுது, கன்னிகை என்ற வார்த்தைக்கு, “பரிசுத்தமாக்கப்பட்டது (யாருக்காவது இது தெரியுமா?) பரிசுத்தம், சுத்தமான, பரிசுத்தமாக்கப்பட்ட” என்று அர்த்தம்.

கர்த்தரை சந்திக்கப் புறப்பட்டுச் சென்ற அவர்கள் பத்து பேர்களாயிருந்தனர்.

106. இப்பொழுது கவனியுங்கள், அவர்கள் முதல் ஜாமம்,

இரண்டாவது ஜாமம், மூன்றாம் ஜாமம் துவங்கி ஏழாம் ஜாமம் வரை நித்திரை செய்ய ஆரம்பித்தனர்.

ஆனால் இவர்களோ உண்மையாகவே கர்த்தரைச் சந்திக்கச் சென்றனர். ஆகவே நினைவில் கொள்ளுங்கள், அவர்கள் புறப்பட்டுச் சென்ற போது கர்த்தர் வந்தார். அது கர்த்தருடைய வருகையின் நேரமாக இருந்தது. எந்த ஜாமத்தில்...

107. சிலர் முதலாம் மணி நேரத்தில், சிலர் இரண்டாம் மணி நேரத்தில் நித்திரை செய்தனர்.

சிலர்... என்பதை குறித்து இயேசு பேசினார்.

ஆனால் கர்த்தருடைய வருகையின் போது அவர்களெல்லாருமே விழித்துக் கொண்டனர்.

ஆனால் இந்தக் காரியத்தில், இது கடைசி மணி நேரமாக இருந்தது, ஏனெனில் அவர்கள் பத்து பேரும் கர்த்தரைச் சந்திக்க புறப்பட்டுச் சென்றனர்.

ஐந்து பேர்களின் தீவட்டிகள் எண்ணெயில்லாமல் புகைபிடித்து போயிருந்தது, மற்ற ஐந்து

பேர்களோ எண்ணெயைக் கொண்டிருந்தனர்.

108. இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், வேதாகமத்தில் எண்ணெய் எதற்கு அடையாளமாகக் காணப்படுகிறது? யாராவது கூறமுடியுமா? (சபையார் “பரிசுத்த ஆவி” என்று பதிலளிக்கின்றனர் – ஆசி) பரிசுத்த ஆவி!

அப்படியானால் நீங்கள் பரிசுத்த ஆவியைக் கொண்டிராமல், நீங்கள் சுத்தமாயும், தூய்மையாகவும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகவும்

இருக்கலாம். சுத்தமாக்கப்படுதல் என்பது நீங்கள்...

109. இப்பொழுது கவனியுங்கள், நான் இந்த சிறிய பாட்டிலை எடுக்கப் போகிறேன்.

இது அங்கே கோழிகள் அறுத்தெறியப்படும் இடத்தில் காணப்படுகிறது, அந்த இடம் முழுவதுமாக இருக்கின்றது.

நான் இதை எடுக்கின்றேன்; அது தான் நீதிமானாக்கப்படுதல்: "நான் இந்த பாவியை உபயோகப்படுத்தப் போகிறேன்."

பிறகு இதை நான் உபயோகப்படுத்தப் போகிறேன்

என்றால் நான் செய்யவிருக்கின்ற அடுத்த காரியம் நான் இதை சுத்தமாக்க வேண்டும்.

பிறகு நான் அதை சுத்தப்படுத்தின பின்பு, இதற்கு அடுத்ததாக நான் என்ன செய்வேன்? இதை பரிசுத்தப் படுத்துவேன்.

பரிசுத்தப்படுத்துதல் என்கிற வார்த்தைக்கு "சுத்தமாக்கு" இது பரிசுத்தம் என்கிற வார்த்தை இணையானது வார்த்தை.

பரிசுத்தம் – பரிசுத்தம் என்பது எபிரேய வார்த்தையாகும்.

பரிசுத்தமாகுதல் என்பது கிரேக்க வார்த்தையாகும்.

பரிசுத்தமாகுதல் என்ற வார்த்தை “ஊழியத்திற்கென சுத்தப்படுத்தி தனியாக வைத்தல்” என்று பொருள்படும்.

ஆகவே பிறகு, நீதியின் மேல் பசிதாகம் உடையவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் நிரப்பப்படுவார்கள், பிறகு அவர்கள் ஊழியத்தில் வைக்கப்படுவார்கள்.

**110.** இந்த பாத்திரங்கள்... பழைய ஏற்பாட்டின் கூடாரம், பீடம் பாத்திரங்களை

பரிசுத்தப்படுத்துகின்றது. அவைகள் ஊழியத்திற்கென்று தனியாக வைக்கப்படுகின்றன. அவைகள் ஊழியத்திற்கென்று இருக்கும்பொழுது அப்பொழுது அவைகள் நிறப்பப்படுகின்றன.

111. இப்பொழுது இங்கே தான், அருமையான, விலையேறப்பெற்ற நசரீன்கள், இன்னும் மற்றவர்கள் வழி விலகிப் போயிருக்கிறார்கள். பாருங்கள்? நாமெல்லாரும்...

ஏன் நீங்கள் தவறிப் போகிறீர்கள்? ஏன் பெந்தெகொஸ்தேயினர் உங்களை விட்டு ஓடிப்போனார்கள்.

ஏனென்றால் நீங்கள் ஒளியில் நடக்க மறுத்ததால், அது முற்றிலும் சரியே. பாருங்கள்? அது சரி தான்.

நான் முதன் முதலாக முழங்காலிட்ட பலிபீடம் அந்த விலையேறப் பெற்ற அங்கே இருக்கின்ற அந்த பழைய நசரீன் பலிபீடம் தான்.

அந்த அருமையான, பரிசுத்தமுள்ள, சுத்தமான சபையாகிய அவர்களை தேவன் ஆசீர்வதிப்பாராக, ஆனால் நீங்கள் மிகவுமாக வழிமுறைகளின்படி நடக்கப்பார்க்கிறீர்கள், “நீ இதைச் செய்ய வேண்டும், நீ அதைச்

செய்துதான் ஆக வேண்டும். நீ இதை செய்துதானாக வேண்டும்” என்று கூறி, அது தேவனுடைய கிருபையென்றும், நீங்கள் தெரிந்து கொள்ளுதலின்படி அழைக்கப் பட்டுள்ளீர்கள் என்றும் உணராதிருக்கிறீர்கள்.

ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல ஓடுகிறவனாலும் அல்ல இரங்குகிற தேவனாலேயாம். பாருங்கள்?

தேவன் சபையை உலகத் தோற்றத்திற்கு முன்னரே முன்குறித்தார் (இன்னும் சற்று கழித்து அதைக் குறித்த கேள்வி

நம்மிடம் இருக்கிறது. பாருங்கள்?), உலகத்தோற்றத்திற்கு முன்பே சபையை முன்குறித்தார்.

112. கவலைப்படுகிறதினால் உன் சரீர அளவோடு ஒரு முழத்தையும் உன்னால் கூட்ட முடியாது.

"என் பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" பாருங்கள்?

பாருங்கள், தேவன் தான் அழைப்பை விடுத்தார், தேவன் தான் இழுத்தார், தேவன் தான் சபையை அமைத்தார்.

இப்பொழுது, இப்பொழுது, நீங்கள், "சகோதரன் பிரன்ஹாம், அது முழுக்க கால்வீன் கொள்கையாயிற்றே" எனலாம். இல்லை, அது அவ்வாறல்ல. இப்பொழுது, பொறுங்கள்! தேவன் ஒரு மனிதனை எடுத்து, "இதோ, நான் உன்னை எடுத்து பிறகு..." என்று கூறிவிடுவார் என்பதில் எனக்கு நம்பிக்கை கிடையாது.

**113.** இந்த பாப்டிஸ்டுகளும் பிரஸ்பிடேரியன்களும் "நல்லது, நான் கர்த்தரை விசுவாசிக்கிறேன், என் மனசாட்சி

குற்றப்படுத்துவதற்கான அவசியமே இல்லை!" எனலாம்.

குற்றப்படுத்துவதற்கு உங்களிடம் ஒன்றுமே இல்லாதிருப்பதே ஒரு ஆச்சரியமிக்க காரியம் தான்.

அவர்கள், "நல்லது, நடன மாடுவது என்னைக் குற்றப்படுத்துவதில்லை. சமுதாய விருந்தில் சிறிது மது அருந்துவது எனக்கு எந்த பாதிப்பையும் உண்டாக்காது" என்கின்றனர்.

ஏனெனில் உங்களுக்கு பாதிப்பை உண்டு பண்ண உங்களுக்குள் ஒன்றுமே இல்லை.

“கீழ்த்தரமான தரங்கெட்ட நகைச்சுவைத் துணுக்குகள் கூறுவது எனக்கு ஒன்றும் தொல்லை தராது” ஏன்? உங்களுக்கு பாதிப்பை உண்டு பண்ண உங்களுக்குள் ஒன்றுமே இல்லை.

114. நான் சேவை செய்யாவிடில் அவர் என்னை நரகத்திற்கு அனுப்பிவிடுவாரோ என்றெண்ணி நான் கர்த்தருக்கு சேவை செய்வதில்லை; நான் அவரை நேசிப்பதால் அவருக்கு சேவை செய்கிறேன். எனக்குள் ஏதோ ஒன்று இருப்பதால் தான்

நான் அவருக்கு சேவை செய்கிறேன்.

நீங்கள் வெளியில் சென்று, "எங்கள் சபை இதில் விசுவாசம் இல்லாமலிருப்பதால் நான் இதை விட்டு விடவேண்டியதாயிற்று" என்று கூறினால் நீங்கள் ஒரு மாய்மாலக்காரனைப் போன்று நடந்து கொள்ளுகிறீர்கள். அது சரி.

ஆனால் நீங்கள் அதை நேசிப்பதனால் அதை செய்வீர்களானால், அது தேவனுக்கு ஒரு சேவையாக இருக்குமாயின், உங்கள் இருதயத்தில் ஏதோ ஒன்று தேவனுக்கான உங்கள் அன்பை,

இந்த காரியங்களைக் காட்டிலும் அதற்கு மேலாக மிகப்பெருகச் செய்யுமென்றால், இப்பொழுது நீங்கள் சரியான வரிசையில் இருக்கிறீர்கள்.

ஆனாலும் நான் இன்னுமாக மது அருந்தாமலும், புகைபிடிக்காமலும், மெல்லாமலும், சாபமிடாமலும் இருந்தால் கூட இன்னுமாக நான் நரகத்திற்குச் செல்வேன். நிச்சயமாக!

நான் எல்லா சபைகளையும் சேர்ந்து, ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லா சபைப் புத்தகங்களிலும் என் பெயர்

இருந்தாலும், நல்ல வாழ்க்கையை வாழ்ந்திருந்தாலும், "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்". அது சரியே!

**115.** இப்பொழுது இந்த கன்னிகைகள் பத்து பேர்கள் வந்தனர். நசரீன் மக்களை அப்படியே ஆடிப்போக வைத்தது: ஏனெனில் பரிசுத்த ஆவியின் ஆரம்ப அடையாளமாகிய அந்நிய பாஷையில் பேசுதலை பெந்தெகொஸ்தேயினர் எடுத்தனர். அவர்கள் மக்களை பலிபீடத்தண்டை கொண்டு வந்து

அவர்களை ஏதோ ஒன்றைக் கூறச் செய்து அல்லது ஒன்றன் மேல் ஒன்றைக் கூறச் செய்து அல்லது ஒன்றன் மேல் ஒன்றை பேச வைத்து அந்நிய பாஷை பேசும் வரை காக்க வைத்தனர். ஒரு மெய்யான, உண்மையான பெந்தெகொஸ்தே மக்கள் அவ்விதமாகச் செய்ய விழைய மாட்டார்கள். உங்கள் நசரீன் சபையின் பிசாசும் கூட அநேக காரியங்களை கொண்டிருந்தானே. பாருங்கள்? பெந்தெகொஸ்தே சபையில் அநேகமான காரியங்களை அவன் கொண்டிருக்கிறான், ஆனால்

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பொறுத்த வரையில், அது சத்தியமாகும். அது முற்றிலும் சத்தியம் ஆகும்.

**116.** எனக்குத் தெரிந்த வரையில் அவர்களில் அநேகம் பேர் உள்ளனர். மக்கள் அந்நிய பாஷையில் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். என்னால் நியாயந்தீர்க்க முடியாது; நியாயத் தீர்ப்பு செய்ய நான் அனுப்பப்படவில்லை. அவைகளில் அநேகவற்றை நான் கேட்டிருக்கிறேன்; சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற

கைத்தாளம் போலவும் அது காணப்படும். ஆனால் அந்நிய பாஷையில் பேசுகின்ற உண்மையான பரிசுத்த ஆவி இருப்பதை நான் அறிவேன். அது உண்மை என்பதை நான் அறிவேன். ஆம், ஐயா!

117. ஆனால் மக்கள் உள்ளே வந்து "தேவனுக்கு மகிமை, நான் அதைப் பெற்றுக் கொண்டேன்" என்று கூறுவதை அவர்கள் கண்டனர். நல்லது அப்படியானால், அந்த அதே காரியமானது. இப்பொழுது அவர்கள் மேலும் கீழும் குதித்து அந்நிய பாஷையில்

பேசினதால் அதை பெந்தெகொஸ்தே என்று அழைக்காதீர்கள், நீங்கள் அவர்களை யாரோ ஒருவருடைய மனைவியுடனோ அல்லது யாரோ ஒருவருடைய கணவனோடு கண்டிருக்கிறீர்கள்.

118. “அது பரிசுத்த ஆவியா?” என்று நீங்கள் கேட்கலாம். நசரீன் ஸ்தாபனத்தாராகிய நீங்கள் தரைமுழுவதுமாக புரண்டு கூச்சலிட்டு பிறகு அதே காரியத்தை செய்கிறீர்கள். நீங்கள் கூச்சலிடும் போது அதைப் பெற்றுக் கொண்டீர்கள் என்று நீங்கள்

கூறினீர்கள். பாருங்கள்? நீங்கள் ஜீவிக்கும் ஜீவியத்தின் மூலமாக தவிர அதை நிரூபிக்கத்தக்கதாக எந்த ஒரு வழியும் கிடையாது. “அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்” இது ஒன்று தான் வழி. ஆழ்ந்த பக்தியுள்ள ஜீவியம் மற்றும் கிறிஸ்து உன்னுடன் கிரியை செய்து வார்த்தையை உறுதிபடுத்தி, உன் ஆழ்ந்த பக்தியுள்ள ஜீவியத்தினால் அடையாளங்களும் அற்புதங்களும் பின் தொடர்ந்தால், அது தான் உண்மையான காரியமாகும். ஜீவியம் இல்லாமல் அநேக

அடையாளங்களையுடையவராயிருக்கலாம். நீங்கள் அடையாளங்கள் இல்லாமல் ஜீவியத்தை போலியாக நடித்துக் காட்டலாம், ஆனால் நீ இரண்டையும் ஒன்றாகக் கண்டாயானால், அப்பொழுது அது தான் சரியானதாகும். அது தான் சரியான ஒன்றாகும்.

இப்பொழுது! அப்படியானால், நினைவு கூருங்கள், மணவாட்டியானவள். இப்பொழுது உங்களுக்கு சில நிமிடங்கள் இருக்குமாயின் நான் இதை முடிக்க ஏதுவாயிருக்கும்.

**119.** கவனியுங்கள், ஒரு பெண் உடுத்த ஒரு ஆடையை வெட்டி எடுக்கப்போகிறாள்.

அவள் ஒரு பெரிய துண்டு துணியை வைத்திருக்கிறாள். (அதை என்னவென்று அழைப்போம்? பருத்தித் துணி, கட்டங்களிட்டு நெய்யப் பெற்ற பருத்தித் துணிவகை அல்லது ஏதோ ஒன்று, ஏதோ ஒரு பெயரிட்டு அழைக்கிறீர்கள். அதை பட்டு என்று அழைப்போமாக) அவளிடம் ஒரு அமைப்பு (Pattern) இருக்கின்றது.

அவள் இந்த பெரிய துண்டு துணிகளைப் பார்க்கிறாள். இப்பொழுது இந்த துணிகளைப் பார்க்கிறாள். இப்பொழுது இந்த மாதிரித்துணியை எங்கே வைத்துப்பார்க்கப் போகிறாள் என்பது அவளைப் பொறுத்தது தான். அது சரியா?

அந்த முழுதுணியும் எந்த ஒரு பாகத்தையும் அவள் தெரிந்தெடுக்கலாம்.

அந்த முழு துணியுமே பரிசுத்தமாக்கபட்ட துணி, சுத்தமான துணி ஆகும். பாருங்கள், அது தான் தெரிந்து

கொள்ளுதல். தேவனின் தெரிந்து கொள்ளுதல். ஆகவே அவர் செய்வது என்ன? தெரிந்து கொள்ளுதலின் படி அவர் அதை எடுத்து, இந்த கிறிஸ்துவாயிருக்கின்ற மாதிரி அமைப்பை எடுத்து துணியின் எந்த பாகத்தில் அவர் வைக்க விரும்புகிறாரோ அங்கே அவர் பொருத்திப் பார்க்கிறார். பிறகு அது வெட்டி எடுக்கப்படுகின்றது. இந்த வெட்டி எடுக்கப்பட்ட பகுதி எப்படி பரிசுத்தமாக இருந்ததோ அதே போன்று துணியின் மற்றைய பாகமும் பரிசுத்தமாயிருந்தது, ஆனால் தேவன் தெரிந்து

கொள்ளுதலின்படி, தம்முடைய தெரிந்து கொள்ளுதலை உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே செய்தார். பவுல் கொரிந்தியர் 8ல்– இல்லை, ரோமர் 8ல் “குயவன்– களிமண் குயவனை நோக்கி நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா?” என்று கூறவில்லையா. நீதியுள்ள தேவனாகிய அவர் ஏசா அல்லது யாக்கோபிடம், அந்த இருவரும் பிறப்பதற்கு முன்னர் அல்லது சரியானதை அல்லது தவறானதை செய்யுமுன்னர் எப்படி “ஏசாவை வெறுத்து யாக்கோபைச்

சிநேகித்தேன்” என்று கூறமுடியும்? ஏனெனில் முன்னறிவின்படி ஏசா எப்படிப்பட்டவனென்றும் யாக்கோபு எப்படிப்பட்டவனென்றும் அவர் அறிந்திருந்தார். மனிதனுக்குள் என்ன இருக்கிறதென்பதை அவர் அறிந்திருக்கிறார். அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னரே அவர் அறிந்திருந்தார், அவர்...

120. முடிவில்லாதவர் என்கிற வார்த்தையை உங்களால் விவரிக்க முடியுமானால்... முடிவில்லாதவர் என்கின்ற வார்த்தையானது.... கோடானகோடி கணக்கான கொசுக்கள் இருக்கின்றன, கோடிக்

கணக்கான கொசுக்கள் இவ்வுலகில், அவை ஒவ்வொன்றும் தங்கள் கண்களை நூறாயிரங் கோடி இன்னும் அதிகமான கோடி முறைகள் கண்மூடித் திறந்திருக்கும். அவைகள் ஒன்றாகிலும் தங்கள் கண்ணை மூடித்திறக்கும் முன்னரே தேவன் அதை உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே அறிந்திருந்தார். அது தான் முடிவில்லாமை நிலை. அது தான் முடிவில்லாத நிலையில் இருக்கும் ஒன்றாகும். பாருங்கள்?

121. அவர் முடிவில்லாதவர். ஆகவே நீ என்ன செய்வாய்

என்பதை உலகத் தோற்றத்திற்கு முன்னரே அவர் அறிந்திருந்தார். ஆகவே அவர். கிறிஸ்துவை அனுப்பினார், அந்த... யாராவது ஒருவர், “நல்லது நான் என்னுடைய இழிவான மனப்பான்மையை விட்டு விட்டு அவரைப் பின்பற்றுவேனானால்” அல்லது அதைப் போன்ற ஒன்றை நினைப்பாரெனில், அவ்வாறல்ல. யார் யார் இரட்சிக்கப்படுவார்களென்பதை அவர் அறிந்திருந்தார், ஆகவே யார் இரட்சிக்கப்படுவர் என்பதை அவர் முன்னதாகவே கண்டவர்களை

இரட்சிக்க அவர் கிறிஸ்துவை அனுப்பினார்.

**மத்தேயு 25-ல் கூறப்பட்டிருக்கும் ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் மணவாட்டிக்கு ஊழியம் செய்பவர்களா? அல்லது அவர்கள் மணவாட்டியா? இவர்கள் மணவாட்டிக்கு பணிபுரிகிறவர்கள் என்றால், மணவாட்டி எங்கே இருக்கிறாள்?**

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

## QUESTIONS & ANSWERS ON THE SEALS

173. மத்தேயு 25-ல் கூறப்பட்டிருக்கும் ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் மணவாட்டிக்கு ஊழியம் செய்பவர்களா? அல்லது அவர்கள் மணவாட்டியா? இவர்கள் மணவாட்டிக்கு பணிபுரிகிறவர்கள் என்றால், மணவாட்டி எங்கே இருக்கிறாள்?

42. பாருங்கள், இப்பொழுது, நான் சிறந்த முறையில் புரிந்து கொண்டபடி இந்த ஐந்து கன்னிகைகள்... **பத்து கன்னிகைகள் புறப்பட்டு சென்றார்கள் என்று நீங்கள் அறிவீர்கள். பாருங்கள். இது ஒரு அடையாளமாகவோ அல்லது உவமையாகவோ கூறப்பட்டுள்ளது என்று கூறிடவே நான் விரும்புகிறேன். பாருங்கள், அவர்கள் பத்துபேர் இருந்தனர். பத்து பேருக்கும் அதிகமாக இருந்திருப்பார்கள். ஆனால் இங்கே ஒரு என்ண்ணிக்கையாக அது**

**கூறப்பட்டுள்ளது. புத்தியுள்ள கன்னிகைகள் தங்கள் தீவட்டியிலே எண்ணெய் வைத்திருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டியிலே எண்ணெய் இல்லாதவர்களாக இருந்தார்கள்.**

43. மத்தேயுவில் பத்து பேரில் ஐந்து பேர் மாத்திரமே உள்ளே சென்றதுபோல், ஐந்துபேர் மாத்திரமே எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்லுவார்களா என்பதுதான் அந்த நபர் கேட்ட கேள்வியாகும். இல்லை, அது அவ்வண்ணமல்ல.

44. தங்கள் தீவட்டியில் எண்ணையுடன் சென்றவர்கள் மணவாட்டியின் அங்கத்தினர்களுக்கு இவர்கள் எடுத்துக்காட்டாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் பாருங்கள்? அவர்கள் மணவாட்டியின் ஒரு பாகமாக இருக்கிறார்கள். என்னுடைய புரிந்து கொள்ளுதலின்படி...

45. இப்பொழுது நீங்கள் கவனிப்பீர்களானால், இவர்கள்தான் கடைசி ஜாமத்தின் கன்னிகைகள். ஏழு ஜாமங்கள் இருக்கின்றன. நாம் இப்பொழுது பேசிக்

**கொண்டிருக்கும் ஏழாம் ஜாமமாகிய நடு இரவிலே இந்தக் கன்னிகைகள் எழுந்து தங்கள் தீவட்டிகளை ஆயத்தம் செய்துக் கொண்டு உள்ளே பிரவேசித்தார்கள். ஆனால் உறங்கிக் கொண்டிருக்கும் கன்னிகைகளோ...**

**46.** இப்பொழுது இங்கே ஐந்து கன்னிகைகளைக் குறித்து பொருள் என்ன? என்ற கேள்வி கேட்கப்பட்டுள்ளது. ஏழாயிரம் பேரைக் குறித்தும் அநேகக் கேள்விகள் இங்கே கேட்கப்பட்டுள்ளன. அது உண்மையானவைகளின் ஒரு

அடையாளமாக மாத்திரம் உள்ளன. இந்தக் கடைசிக் காலமாகிய ஏழாம் ஜாமத்திலே ஐந்து பேர்தான் உறக்கத்தினின்று விழித்துக்கொண்டு மறுரூபமாக்கப்பட்டு மணவாளனுடன் சென்றார்கள்? இப்பொழுது அவர்கள்...

47. எடுத்துக் கொள்ளப்படப் போகிறவர்கள் ஐந்து பேர் மாத்திரம் என்பது அதன் அர்த்தமல்ல. ஏனென்றால், இந்த வாரம் நாம் பார்த்த வண்ணம் அவர்கள், சபையின் காலங்களிலெல்லாம்

நித்திரை செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

48. எபேசு சபையின் தூதனாகிய பவுலின் நாட்களில், பவுல் அந்த சபையின் செய்தியாளனாக இருந்ததினால், அந்தச் சபையை ஏற்படுத்தினான். பவுல் எபேசு சபையை ஏற்படுத்தினதினால், அந்தச் சபைக்குச் செய்தியாளன் ஆனான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அக்காலத்தில் இருந்த ஆவி சிங்கத்தின் ஆவியாக இருந்தது. சிங்கமென்று சொல்லும்போது அது யூதா

கோத்திரத்து சிங்கமாகிய கிறிஸ்துவையே குறிக்கிறது. கிறிஸ்துவே அந்த வார்த்தை. பவுல் அக்காலத்திற்குரிய வார்த்தையுடன் வந்தான். அந்த யுகத்திலே ஆயிரமாயிரமானவர்கள் நித்திரை யடைந்தார்கள். அது சரிதானே? (சபையார் "ஆமென்" என்கின்றனர்—ஆசி).

49. அதற்குப் பிறகு அடுத்த யுகம் வந்தது. இருண்ட யுகத்திற்குள் சபை சென்றபோது காளையின் ஆவி புறப்பட்டுச் சென்றது. காளையானது உழைப்புக்கும், பலிக்கும் உரிய

மிருகமாக இருப்பதுபோல, ஆயிரமாயிரமான பேர்கள் இரத்த சாட்சிகளாக மரித்தார்கள், நித்திரையடைந்தார்கள். அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவீர்கள்.

**50.** அடுத்தபடியாக சீர்திருத்த யுகமாகிய லூத்தரின் யுகம் வந்தது. அப்பொழுது சாமர்த்தியமுள்ள, மனித ஞானமுள்ள ஆவி சென்றது. நீங்கள் கவனிப்பீர்களானால், அவன் அதனுடன், தன்னுடைய ஞானத்தையும் சேர்த்து, மற்றொரு பங்கினுடன் (ஸ்தாபனத்துடன் – தமிழாக்கியோன்) விவாகம்

செய்துக் கொண்டான், பாருங்கள். பாருங்கள்? இந்த யுகத்திலே மனிதன் தன் ஞானத்துடன் சென்றான். சீர்திருத்தம், தேவஞானத்தோடே மக்களை பிரித்துக் கொண்டு வருவதுடன் இருந்து விட்டிருந்தால் நலமாயிருந்திருக்கக்கூடும். ஆனால் அவன் என்ன செய்தான்? செய்தியைக் கொண்டு வந்த மனிதனாகிய லூத்தரின் மரணத்திற்குப் பிறகு, அவர்கள் லூத்தரன் ஸ்தாபனத்தை உண்டாக்கிக் கொண்டார்கள்.

51. வெஸ்லியின் மரணத்திற்குப் பிறகு மெத்தோடிஸ்ட் ஸ்தாபனத்தை உருவாக்கிக் கொண்டார்கள் என்பதை அறிவீர்கள். பாருங்கள்? இவ்விதமாக சென்று கொண்டேயிருந்தனர். அது... அதுதான் அதைச் செய்கின்றது. இப்பொழுது, நீங்கள் இதைக் கவனிக்கவேண்டும் என விரும்புகிறேன். மூன்றாவது யுகமாகிய பெந்தெகொஸ்தே யுகத்தைக் குறித்து சிலர் கேட்கலாம்.

52. நீங்கள் பாருங்கள், ஒவ்வொரு யுகத்திலும் பரிசுத்த ஆவிக்குள் ஒரு மூழ்குதலை பெற்றார்கள். நீதிமானாக்கப்படுதல் பரிசுத்த ஆவியின் ஒரு கிரியையாகும். பரிசுத்தமாக்கப்படுதல் பரிசுத்த ஆவியின் ஒரு கிரியையாகும். ஆனால் ஞானஸ்நானம் என்பது பரிசுத்த ஆவியியாய் இருக்கிறது. ஆகவேதான் ஒரு முன்னுணர்ந்துரைக்கிற (prophetic) ஒரு தீர்க்கதரிசி (Prophet) வரவேண்டியதாக இருந்தது. செய்தியாளன் அல்ல. பரிசுத்த ஆவியானவரே, பரிசுத்த

ஆவியின் ஞானஸ்நானம் மூலமாக தாமே தம் முழுமையில் வந்தார்.

53. ஒவ்வொரு யுகத்தின் முடிவிலும் செய்தியாளன் அனுப்பப்பட்டு குழப்பங்களை அகற்றி ஒழுங்குபடுத்தி சபையை அதன் நிலையில் நிறுத்தினான். கடைசியாக சபைக்கு எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது.

54. சூரியன் அந்தகாரப்பட்டு, சந்திரன் இரத்தம் போலாவது.... போன்ற காரியங்களை மக்கள் புரிந்துக் கொள்ளாமல் சபையின் காலங்களில் இவைகளை இணைத்திருக்கிறார்கள். நம்முடைய

கர்த்தரை, அவருடைய சீஷர்கள் மூன்று கேள்விகளை கேட்டபோது, அவர் தந்த பதில்களை மக்கள் புரிந்துகொள்ளத் தவறிவிட்டனர்.

**55.** இப்பொழுது கடந்த இரவு எந்த கேள்வியும் கேட்கவில்லையென்று நினைக்கிறேன். எல்லாக் கேள்விகளையும் எடுத்து முத்திரைகளின் கீழ் வைத்திருக்கிறோம். முத்திரைகள் ஒரு முழு புஸ்தகமாக இருக்கிறது.

டாக்டர், நீர் அதை விசுவாசிக்கிறீரா? (ஒரு சகோதரன் "ஆம்" என்கிறார் – ஆசி)

56. பாருங்கள், எல்லாம் ஒன்றாக இணைக் கப்பட்டிருக்கிறது. இயேசு இங்கே என்ன கூறினாரோ, அதை நாம் பார்த்தோம். இயேசுவினிடத்தில் மூன்று கேள்விகளை அவர்கள் கேட்டார்கள்! “இது எப்போது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கு அடையாளம் என்ன? உலகத்தின் முடிவிற்கு அடையாளம் என்ன?” அவர் கொடுத்த விடைகளில், ... நாம் அதன் கீழாக எல்லாவற்றையும் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்த்தோம், ஆனால் ஒன்றைத் தவிர, அது என்ன? ஏழாம் முத்திரை. அது

என்னவென்று இன்னும் தெரியவில்லை. அதுவேதான். எல்லாம் சரியாக பொருந்தினது. அவைகளை முன்னும், பின்னுமாக ஜோடியாக இணைத்துக் காட்டினேன்.

57. ஆகவே, நான் திரும்பவும் சென்று என்னுடைய பழைய குறிப்புகளை எடுத்து பார்த்தபோது அவைகளை அதனதன் இடத்தில் சரியாகப் பொருத்தாமல், ஒரு காரியத்தை மற்றொரு இடத்திலும், மற்றொன்றை வேறோரு இடத்திலும் தவறாகப் பொருத்தியிருந்தேன். இவ்விதமாகத்தான் செய்திருந்

தேன். நீங்கள் இதை கிரகித்துக் கொண்டீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் அதைக் கிரகித்துக் கொண்டீர்களா? பாருங்கள்?

58. நான் எங்கே குறிப்பை எழுத வேண்டுமென்றிருந்தேனோ, அதை இந்தப் பக்கத்தில் எழுதி வைத்துவிட்டேன். அவைகள் இரண்டையும் 9, 11 அல்லது 9,6 அல்லது 6–ம் 11–ம், 9–ம் 11–ம் என்று எழுதி வைத்து விட்டேன். அது அவ்விதம் அல்ல. அந்தக் குறிப்பு மாற்றி எழுதி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அது அடுத்து வசனத்தில் இருந்தது.

பாருங்கள்? அதனுடைய பதில் பஞ்சங்களுக்கும் யுத்தத்திற்கும் இடையில் இருந்தது. (சகோதரன் பிரான்ஹாம் தான் அங்கே மத்தேயு 24, வெளி. 6ல் நான்காவது முத்திரையை ஒப்பிட்டுக் காட்டியதைக் குறிப்பிடுகிறார். ஆறாவது முத்திரை, 166 முதல் 174 பத்திகளைக் கவனிக்கவும் – தமிழாக்கியோன்.)

59. ஆகவே, நான் மிகவும் மகிழ்ச்சியாயிருந்தேன். வெளிப்படுத்தலினால் வரும் புத்துணர்வை ரசித்துக் கொண்டேயிருந்தேன். அங்கே

உட்கார்ந்து கொண்டு பென்சிலையோ அல்லது பேனாவையோ வைத்துக் கொண்டு இரண்டு பக்கங்களிலும் 11 என்று குறிப்பெழுதினேன். அது அவ்விதம் அல்ல. அது 11க்குப் பதிலாக 9 என்று இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். கொள்ளைநோய், யுத்தங்கள் போன்ற காரியங்களை எடுத்து அவைகளை எப்படிப் பொருத்துவது என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

60. ஆனால் இப்பொழுதோ, எல்லாம் ஒழுங்காக ஜோடியாக

அமைந்திருப்பதை நீங்கள் கண்டீர்களா? இப்பொழுது ஆறாம் முத்திரைவரை ஒழுங்காக பொருத்தப்பட்டு நின்றுவிட்டதை நீங்கள் மறந்து விட வேண்டாம். ஆறாவது முத்திரைவரை முத்திரைகள் திறக்கப்பட்டு, இப்பொழுது "பரலோகத்தில் அரைமணி நேரம் அமைதலில் நின்றிருக்கிறது." "அரைமணி நேரம் அமைதல்" என்று மாத்திரம் சொல்லப்பட்டு இருக்கிறது.

**61.** இப்பொழுது பாருங்கள், நான்... இக்கேள்விகளுக்கு நான் துரிதமாக பதில் அளிக்க

வேண்டியவனாக இருக்கிறேன். ஏனென்றால் ஒவ்வொரு பதிலும் நான்கு வாரத்தில் கொடுக்கும் செய்தியின் நீளத்திற்கு உள்ளது. நான் அவ்விதம் செய்யாமல் ஒவ்வொருவரின் கேள்விக்கும் என்னால் முடிந்தவரை பதில் அளிக்க விரும்புகிறேன்.

62. இந்த கன்னிகைகள், பாருங்கள், அவர்கள். அந்த காலத்தில் அவர்கள் ஒரு பாகமாயிருந்தனர். பாருங்கள்? ஒவ்வொரு காலமும் கன்னிகைகளைக் கொண்டிருந்தன. பாருங்கள்? ஒரு – ஒரு முத்திரை...

தூதன் சபைக்கு வருகிறான்: “எபேசு சபையின் தூதனுக்கு எழுத வேண்டியது என்னவெனில்” என்று கூறுவதை கவனிக்கவும்.

63. எபேசு சபைக்கு எழுதப்பட்டிருப்பதை வாசித்த பிறகு (மீண்டும் அதை ஒப்பிட்டுப் பார்க்கவும்) ஒரு முத்திரை திறக்கப்படுகிறது. கர்த்தருக்குச் சித்தமாயிருப்பின், இவ்விதமாகத்தான் எல்லாம் உங்களுக்கு அளிக்க நாங்கள் முயற்சிக்கிறோம். நான் என்ன கருதுகிறேன் என்பதை அறிந்து கொண்டீர்களா?

64. முதலில் நாம் எதைப் பெற்றோம்? சபையின் காலங்கள். அது சரி தானே? அதற்குப் பிறகு, சபையின் காலங்களுக்குரிய செய்திகள். இப்பொழுது இது எல்லோருக்கும் தெளிவாக இருக்கிறதா? பாருங்கள்?

65. முதலில் சபையின் காலங்களும், சரித்திரமும் நமக்கு கொடுக்கப்பட்டது. நிசாயா ஆலோசனை சங்கம், நிசாயா ஆலோசனை சங்கத்துக்கு முந்தின காலங்கள், மற்றும் இவை போன்ற காரியங்களை சரித்திரத்தில் நாம் கண்டுபிடிக்க முடிந்தவைகள்.

அதன் பிறகு, வார்த்தையின் உண்மையான வியாக்கியானம் சரித்திரத்தோடு இணைந்து செல்லுகிறதைக் கண்டோம். இவ்விதமாக லவோதிக்கேயா காலமாகிய இக்கால மட்டும் கொண்டு வரப்பட்டோம். இக்காலத்திற்குரிய சரித்திரம் நமக்கு கொடுக்கப்படவில்லை. இதுதான் சரித்திரம் எழுதப்படுவதாகும் என்பதை கவனிக்கவும். பாருங்கள், இதோ இருக்கின்றது. இக்காலத்தில், காரியங்கள் எப்படியிருக்கும் என்பதுதான் காட்டப்பட்டுள்ளது.

66. நாம் இப்பொழுது முத்திரைகளுக்கு வந்து அந்த முத்திரையைத் திறக்கின்றோம். தேவன் நமக்கு அந்த முத்திரையைத் திறக்கிறார். அது என்ன? முதலில் ஒரு சபையின் செய்தியாளன். சபையின் காலம், அதற்குப் பிறகு ஏழு முத்திரைகள்.

67. இப்பொழுது, ஏழாம் சபையின் காலத்தில் வரும் சீர்கேட்டை கவனிப்போம்... ஆனால் ஏழாம் முத்திரையில் என்ன நடக்கப்போகிறது என்பதை அறிவிக்கவில்லை என்பதை அறியவும். பாருங்கள், ஏனென்றால்,

இந்தச் சபையின் காலத்தின் முடிவில் இவைகளை வெளிப்படுத்த ஒரு தீர்க்கதரிசன வரம் வரவேண்டும். பாருங்கள்? நீங்கள் இதை புரிந்து கொண்டீர்களா? (சபையார் "ஆமென்" என்கின்றனர் – ஆசி) அது சரி. முத்திரைகள் ஒவ்வொன்றும். எவ்வாறு...

68. அதன்பின் நான் இவ்விடம் வந்து... முத்திரைகள் ஒவ்வொன்றும், இயேசு கிறிஸ்துவிடம் கேட்ட மூன்று கேள்விகளின் விடைகளோடு பொருந்துவதை கண்டோம். "இவைகள் எப்பொழுது

சம்பவிக்கும்? ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடி எப்பொழுது இடிக்கப்படும்? உலகத்தின் மதத்திற்கு மையமான இடமாக வேறொரு இடம் எப்பொழுது ஸ்தாபிக்கப்படும்? பாருங்கள்? அந்திக்கிறிஸ்து எப்பொழுது வருவான்? பாருங்கள்? அவனை எதிர்க்க என்ன சென்றது? – வார்த்தை. வார்த்தைக்கு எதிராக வார்த்தை.

**69.** அதன் பிறகு அது அரசியலுக்குள்ளும் மற்ற எல்லாக் காரியங்களிலும் விழுந்தது. அப்பொழுது காளை புறப்பட்டு

சென்றது. பாருங்கள்? அதுதான் இரண்டாவது முத்திரை. இயேசு, மத்தேயு 24ல் அவ்விதமே கூறியுள்ளார், பாருங்கள். அதன் பிறகு அதிலிருந்து சீர்திருத்தக்காரரின் ஞானத்திற்கு வருகிறோம். அப்பொழுது மனித முகம் கொண்ட ஜீவன் புறப்பட்டுச் சென்றது. அதுதான் நடந்தேறியது. அதற்குப் பிறகு நான்காவது முத்திரைக்கு வரும்போது, மற்ற மூன்று முத்திரைகளின் காலத்தில் கிரியை செய்த அந்திக்கிறிஸ்துவின் வல்லமைகள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து வரும்போது, அவனுக்கு "மரணம்"

என்னும் பெயர் கொடுக்கப்படுகிறது.

70. இப்பொழுது இயேசு என்ன சொன்னார் என்பதைக் கவனியுங்கள்: “அவளை அக்கினியில் எரித்து அவளுடைய பிள்ளைகளையும் கொல்லுவேன்.” இது தான் மரணம் சவாரி செய்வதாகும். பிராடெஸ்டண்டாரும், கத்தோலிக்கரும் – அவர்கள் ஒவ்வொருவரின் மீதும் மரணத்தின் அடையாளம் காணப்படுகிறது – பாருங்கள்? “அவளும் அவளுடைய பிள்ளைகளும் அழிக்கப்படுவார்கள்.” ஆகவே,

நீங்கள் உங்கள் ஸ்தாபனத்தின் மீது சார்ந்திருப்பீர்களானால், இப்பொழுதே அதை விட்டு வெளியே வாருங்கள்.

71. ஆகவே பிறகு ஏழாம் முத்திரைக்கு வரும்போது இயேசு அங்கே நிறுத்திவிட்டார். "சந்திரன் இரத்தமாகும், அந்தகாரம், மற்றும் நடக்கப் போகும் காரியங்களை" அறிவிப்பதினால் அவர் ஆறாம் முத்திரையைத் திறந்தார். நாம் இங்கே வந்து ஆறாம் முத்திரையைத் திறந்தோம். ஆறாம் முத்திரையைத் திறந்தபோது, அதே காரியத்தைக் காண்பிக்கிறது.

72. வேதத்தில் மூன்று வெவ்வேறான இடங்களில் கூறப்பட்டுள்ள வார்த்தைகள், வெளிப்படுத்தலுடன் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்தீர்களா? கவனியுங்கள். வேதத்தில் இயேசு அவ்விதம் கூறின இடம், உலகத் தோற்றமுதல் மறைக்கப்பட்டிருந்ததை அவர் புஸ்தகத்தை திறந்து காட்டிய இடம், மற்றும் இந்த நாளுக்குரிய வெளிப்படுத்தல் ஆகிய இம்மூன்றும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது. மூன்று சாட்சிகள் ஒருமித்துக் கூறும்போது

அது உண்மையாக இருக்கிறது. அது முற்றிலும் உண்மையாக இருக்கிறது.

73. இப்பொழுது, இந்த நித்திரை அடைந்த கன்னிகைகள்தான் எல்லாம் ஒன்றாக சேர்ந்து முழுசரீரமாக்கப்படுகிறார்கள். இவர்கள்தான் புத்தியுள்ள கன்னிகைகள். புத்தியில்லாத கன்னிகைகள், அந்திக் கிறிஸ்து, புத்தியுள்ள கன்னிகைகள் தொடங்கினபோதே தொடங்கினார்கள். எண்ணெய்

வாங்க முயற்சித்தவர்கள் இவர்களே.

74. இப்பொழுது இங்கே கவனியுங்கள். எல்லாம் ஒழுங்காக பொருந்துவதைக் கவனியுங்கள். அந்த அறையில் வெளிப்படுத்தப் பட்டவைகளை இங்கே நின்று கூறுவேனானால் உங்களுக்கு தலையே சுற்றிவிடும். அப்படியானால் எல்லாவற்றையும் கூறும்போது என்ன செய்யப்போகிறீர்கள்?

75. ஆகவே, அதன் பிறகு, மக்களை விட்டு பிரிந்து போகும்போது தேவ இரகசியங்கள்

திறக்கப்படுகிறது. மக்களுக்குக்கூட அறிவிக்கப்பட முடியாத காரியங்கள் வெளிப்படுகிறது. ஏனென்றால் நீங்கள் பாருங்கள், அவர்கள் சிறு உபதேசங்களை உருவாக்கிக் கொள்ளுவார்கள்.

76. சுகமளிக்கக்கூடிய இச்சிறு வரத்தை கவனியுங்கள். அது எவ்வளவாக சபையைக் குழப்பத்துக்குள்ளாக்கிவிட்டது. மக்கள் இதைக் கண்ட போது, ஒவ்வொருவரும் ஒருவித உணர்வு பெற்று ஒவ்வொருவரும் இதைச் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அது தவறு என்று என்னுடைய

இருதயத்தில் அறிவேன். இது உண்மையென்று தேவன் அறிவார். ஏனென்றால் தேவன் என்னிடம் அவ்விதம் கூறினார். பாருங்கள்? இது வெறும் போலியான காரியங்கள். இது மக்களை சிதறடிப்பதாகும். இப்பொழுது அது சரிதான். இப்பொழுது அக்காரியங்களை கூற முடியாது. அதை அப்படியே விட்டுவிடுவது நல்லது.

77. மூன்றாவது இழுப்பைக் குறித்து யாருக்கும் சொல்லவேண்டாம்" என்று அறிவிக்கப்பட்டது உங்களுக்கு

நினைவிருக்கும். அது என்னவென்று கூறினேன்? அது எத்தனை பேருக்கு ஞாபகம் உள்ளது? நிச்சயமாக. அந்த தரிசனத்திலே நின்று கொண்டு அந்த சிறிய பாதரட்சை (Shoe)க்கு லேஸ் போட முயற்சித்துக் கொண்டிருந்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா? "நீ பெந்தெகொஸ்தே பிள்ளைகளுக்கு இயற்கைக்கு மேலான காரியங்களைக் கற்றுக்கொடுக்க முடியாது" என்று அவர் கூறினார்.

78. இது மூன்றாவது இழுப்பாக இருக்கும். இதை அறியமுடியாது.

ஆகவே தேவனுடைய கிருபையால் எனக்கு உதவி செய்யும் என்று கேட்டேன்.

நாம் இப்பொழுதே கடைசி நேரத்தில் இருக்கிறோம். கிருபாசனம் நியாயாசனமாக மாறுவதற்கு அதிக நேரமாகாது. இப்பொழுது ஏற்கெனவே நீங்கள் உன்னதங்களில் கூட்டி சேர்க்கப்படாதிருந்தால், இக்காரியங்கள் நிகழ்வதையும், இந்த மக்கள் உள்ளே வருவதையும் காணும்போதே, நீங்களும் உள்ளே வருவது மேலானதாக இருக்கும். பாருங்கள்?

79. இப்பொழுது, 'உன்னதங்களில் கூட்டிச் சேர்க்கப் படுதல்' என்பது, இது வெறும் மகிழ்வதைக் காட்டிலும் மேலானதாக இருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளே உன்னதங்களிலே உண்மையாக கூட்டப்பட்டிருப்பீர்களானால் இது ஒரு பயத்திற்குரிய காரியமாகும்.

80. கர்த்தருடைய தூதனானவருக்கு பக்கத்தில் நின்று கொண்டு ஆனந்த சத்தமிட்டு துதித்துக் கொண்டிருக்கலாம் என்று நீங்கள் நினைக்கலாம். அது அவ்வண்ணமல்ல. அது அநேகமாக

மரணத்துக்குள்ளாக்கும் பயமான ஒரு காரியமாகும். பாருங்கள்? ஆகவே, உள்ளம் பொங்க மனமகிழ்ச்சியினால் நடனம் ஆடுவது சரிதான். ஆனால் இதற்கும் உண்மையான காரியத்திற்குள் வருவதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு என்பதை நீங்கள் அறிய வேண்டும். பாருங்கள்? பாருங்கள்? பயம் என்பதே அங்குதான் உள்ளது. இது ஒரு பயத்திற்குரிய காரியமாகும். நீங்கள் இழந்து போனதாக கருதும் பயம் அல்ல. ஆனால் அங்கே நின்று கொண்டிருக்கும் தேவதூதனுக்கும், பரிசுத்த

ஆவியானவருக்கும் முன்பாக உண்மையிலேயே நின்றுகொண்டிருப்பதுதான் பயத்துக்குரியதாக இருக்கிறது.

81. இப்பொழுது, அது (கன்னிகைகள்— தமிழாக்கியோன்) மணவாட்டியின் ஒரு பாகமாக இருக்கும். நித்திரை செய்துக் கொண்டிருப்பவர்களுடன் இவர்களும் சேர்க்கப்படுவார்கள். நம்மால் அதை முற்றிலுமாக...

(ஒலிநாடாக்கள் பதிவு செய்யும் முறையில் கோளாறு ஏற்படுகிறது. ஒலிநாடாவில் காலி இடம் — ஆசி)... இங்கே உள்ளே

கைகுட்டைகளின் மூலம் இந்த ஜனங்களுக்கு சுகமளிக்கும்படி இப்பொழுது ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில். ஆமென்.

இப்பொழுது, அது சரியாகிவிட்டதா? (ஒரு சகோதரர் 'ஆமென்' என்று கூறுகின்றார் – ஆசி) உங்களுக்கு நன்றி. யாராவது ஒருவர் எதின் மீதாகிலும் மிதித்தார்களா? (ஒரு சகோதரன், 'இங்கு அநேக ஒலிப்பதிவு செய்யும் கருவிகள் உள்ளன,' என்று கூறுகிறார்) அநேக ஒலிப்பதிவு கருவிகள் இருப்பதால், அதிகமான அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

பாருங்கள்? சரி, அது அதைத் தாக்குகிறது. இப்பொழுது அடுத்த கேள்வியைக் கவனிப்போம்.

நாம் மரிக்கையில், நாம் இயேசு கிறிஸ்துவுக்குள் இருப்போமானால், மறுகரையில் நிச்சயமாக கிறிஸ்து இயேசுவாகிய அந்த மகத்தான சரீரத்துடன் இருக்கத்தக்கதாக நாம் செல்வோம்.

நாம் பாவிகளாக இருப்போமானால், அவிசுவாசிகள் என்னும் பெரிய சரீரத்துடன் இருக்கத்தக்கதாக நாம் செல்வோம்; நம்முடைய பங்கு அங்கே நரகத்தில் மாய்மாலக்காரர்கள் இன்னும் மற்றவர்களுடன் இருக்கும் என்றும் தேவன் கூறியுள்ளார். ஆமென்!

## செய்தி: 54-01-03E கேள்விகளும் பதில்களும் COD #3

69. "எடுத்துக் கொள்ளப்படுதலைக் குறித்தென்ன?" நல்லது, எடுத்துகொள்ளப்படுதல் சமயத்தில் ...

இயேசு அதை ஒரு உவமையாக கற்றுக் கொடுத்தார். அவர் அதை பல வித்தியாசமான வழிகளில் போதித்தார். இதோ ஒரு வழி.

கர்த்தரை சந்திக்க சென்ற பத்து கன்னிகைகள் இருந்ததாக அவர் கூறினார். ஆகவே...

அவர்கள் எல்லாரும் கன்னிகைகளாக இருந்தனர், ஆனால் சிலர் தங்கள் தீவட்டிகளில் எண்ணெயை வைத்திருந்தனர், சிலர் எண்ணெயை வெளியே போக விட்டுவிட்டனர். அது சரியா? ஆகவே மணவாட்டி...

இப்பொழுது, அந்த எண்ணெய் என்னவாகயிருந்தது? அந்த எண்ணெய் பரிசுத்த ஆவி ஆகும்; வேதாகமம் அவ்வாறு கூறுகின்றது. இப்பொழுது கவனியுங்கள்.

அவர்கள் கன்னிகைகளாக இருந்தனர். இப்பொழுது, கன்னிகை என்றால் என்ன? “பரிசுத்தமானது, சுத்தமானது, வேறு பிரிக்கப்பட்டது, பரிசுத்தமாக்கப்பட்டது” அது சரியா?

70. ஒரு சிறிய கண்ணாடி என்னிடம் இருந்தால் அதை நான் காண்பிக்க ... இங்கே உதாரணத்திற்கு, இங்கே இருக்கின்ற பாட்டிலைப் போல, அது காலியாக இருந்தால், நான் அதை எடுத்து, அதை எடுத்தேன். நான் அதை உபயோகிக்க விரும்புகிறேன்.

இப்பொழுது நல்லது, நான் முதலாவதாக செய்ய விரும்பும் காரியம், நீதிமானாக்கப்படுதல். தான் அதை உபயோகிக்க விரும்பினதாலேயே அதை எடுத்தேன். அது அழுக்காக இருக்கின்றது; நான் அதை பன்றித் தொட்டியில் கண்டெடுத்தேன், அல்லது வேறெங்காவது இருந்திருந்தாலும் சரி. இப்பொழுது நான் ஒரு சரியான நபராக இருப்பேனானால், நல்லது, அங்கே நான் உபயோகப்படுத்தப் போகின்ற அதில் ஏதோ ஒரு சுத்தமானதை வைக்க தான் விரும்பமாட்டேன்.

முதலாவதாக நான் – நான் அதை தீர்மானித்தாக வேண்டும்.

இப்பொழுது, செய்ய வேண்டிய சிறந்த காரியம் என்னவெனில் அதை தேய்த்துக் கழுவி, அதை சுத்தமாக்கி, பிறகு அதை பரிசுத்தம் செய்தல் ஆகும். அது சரியா?

இப்பொழுது பரிசுத்தமாக்குதல் என்ற வார்த்தையின் பொருள் என்ன? சுத்தமாக்கப்பட்டு, ஊழியத்திற்கென்று வேறு பிரிப்பது“ பழைய ஆலயத்தின் பாத்திரங்கள் சுத்தமாக்கப்பட்டு ஊழியத்திற்கு பிரிக்கப்படுகின்றது.

71. இப்பொழுது, அதோ அந்த சபை, தேவன் லூத்தரின் காலத்தின் மூலமாக அதை எடுத்தார், நீதிமானாக்கப்படுதல்; வெஸ்லியின் காலம், அவர் அவர்களை பரிசுத்தமாக்கினார். இந்த காலத்தில் அவர் அவர்களை நிரப்புகிறார். பாருங்கள்? பரிசுத்த ஆவியின் மூலமாக அவருடைய ஜீவன் , , , பரிசுத்த ஆவி அவர்களை எடுத்தது; பரிசுத்தாவி அவர்களை பரிசுத்தமாக்கியது. பரிசுத்த ஆவி அவர்களை நிரப்பினது. பாருங்கள்? அதே சபைதான். ஆனால் இப்பொழுது

கவனியுங்கள், இப்பொழுது இந்த நாளில்.

72. இப்பொழுது, லூத்தர், வெஸ்லி, மற்றும் அவர்கள் எல்லாரும், அவர்களில் அநேகர் எடுத்துக்கொள்ளப்படுதலில் செல்வார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்களுக்கு பிரசங்கிக்கப்பட்ட ஆவியின் பாகத்தை அவர்கள் கொண்டிருந்தனர்; அவர்கள் அதை விசுவாசித்தனர்.

73. இப்பொழுது எடுத்துகொள்ளப்படுதலில்... இன்று அசைந்து செல்லாத

ஸ்தாபனங்களுக்குள் சென்று விட்ட ஜனங்கள் உள்ளனர். அது ஒரு – … ஒரே ஒரு ஸ்தாபனம் தான் இருக்கின்றது, அது தேவனுடைய சபையாகும்; அது அதே விதமாக அசைந்து சென்றது. ஆனால் இந்த ஸ்தாபனங்களோ இந்த காரியங்களை உடைத்துப் போட்டிருக்கின்றன. அநேக ஜனங்கள் இன்றைக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பார்த்து அது ஒன்றுமற்றது என்று கூறுகின்றனர். ஆனால் இன்னுமாக அவர்கள் நீதிமான்களாக்கப் பட்டிருக்கின்றனர்; இன்னுமாக அவர்கள் பரிசுத்தமாக்கப்

பட்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் "ஓ, அந்த உபயோகமற்ற காரியத்தை செய்து கொண்டிருக் கின்றனர்" என்று கூறுவர்.

74. **எல்லா விதமான சோளக் கொல்லை பொம்மைகளையும் பிசாசு வைத்திருக்கின்றான் என்று எனக்குத் தெரியும்.**

**எங்கே நல்ல ஆப்பிள் பழங்களை காண்கிறீர்களோ, அங்கே தான் சுற்றிலும் சோளக் கொல்லை பொம்மைகள் இருக்கின்றன. அது சரி.**

**நீங்கள் நேராக அங்கே சென்று ஆப்பிள் பழங்களை சாப்பிட்டுக் கொண்டிருங்கள். பாருங்கள்?**

75. இப்பொழுது இந்த ... பிறகு தேவன் பரிசுத்த ஆவியால் நிரப்பினார். பிறகு அவர் அதை மகிமைப்படுத்தத்தக்கதாக தம்முடைய சபையை வைக்கின்றார். இரண்டாவது வருகையில், இங்கே மணவாட்டி, சபை திரும்பவருகிறது. இப்பொழுது கவனியுங்கள். அவர்கள் உபத்திரவக் காலத்தினூடாக செல்கின்றனரா என்று பாருங்கள்.

அவர் “இந்த கன்னிகைகள் வந்து, “உங்கள் எண்ணெயில் எங்களுக்கு கொஞ்சங்கொடுங்கள்” என்றார்கள்” என்று கூறினார்.)

“மணவாளன் வருகின்றார்!” என்கின்ற சத்தம் புறப்பட்டுச் சென்றது, “இதோ மணவாளன் வருகின்றார். அவரை சந்திக்கத்தக்கதாக அவருக்கு எதிர் கொண்டுப் போகப் புறப்படுங்கள்”,

ஆகவே இந்த கன்னிகைகள், கன்னிகைகள் என்றால் யார், பரிசுத்தமானவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்

(அதைக் குறித்து சிந்தியுங்கள்), பரிசுத்தமானவர்கள், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாமல் பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்கள், அவர்கள், "எங்களுக்கு எண்ணெயைக் கொடுங்கள்" என்று கூறினார்கள்.

76. ஆகவே அந்த சபையானது, "போதுமான அளவுதான் எங்களிடம் உள்ளது, அப்படியானால் நீங்கள் சென்று ஜெபியுங்கள்" என்று கூறினது.

ஆனால் அப்பொழுது மிகவும் காலதாமதமாகி விட்டிருந்தது.

**ஆகவே, அந்த சபை கலியாணத்திற்குள் சென்றது, இந்த மற்றவர்கள் புறம்பான இருளுக்குள் தள்ளப்பட்டனர் (அது சரியா?) அங்கே அழுகையும், கூக்குரலும் பற்கடிப்பும் இருந்தது; ஆகவே அவர்கள் உபத்திரவத்திற்குள் சென்று, அவதிப்பட்டு, மரித்தனர்.**

77. இயேசு பூமிக்கு திரும்பி வந்தார். அவருடன் ஆயிரம் வருடங்கள், ஆயிரவருட அரசாட்சி துவங்கினது. நீதியுள்ளவர்களும் அநீதியுள்ளவர்களும் வந்தனர். அவர்கள் ஒவ்வொரு மனிதனையும்

நியாயத்தீர்த்தனர். ஒரு பக்கம் வெள்ளாடுகளும் மறுபக்கம் செம்மறியாடுகளும் இருந்தன. பிறகு தேவன் வந்து பூமியின் விசாலத்திலிருந்து, கூடார சந்திப்பிற்காக சபையை மேலே எடுக்கின்றார், அங்கே நம்முடைய அருமையானவர்களுடன் நாம் ஒன்று கூடுவோம். பாருங்கள்? அங்கேதான் அந்த வித்தியாசம் உள்ளது.

78. இப்பொழுது இங்கேயிருக்கின்ற இந்த ஜனங்கள் ...

நாம் மரிக்கையில், நாம் இயேசு கிறிஸ்துவுக்குள் இருப்போமானால், மறுகரையில் நிச்சயமாக கிறிஸ்து இயேசுவாகிய அந்த மகத்தான சரீரத்துடன் இருக்கத்தக்கதாக நாம் செல்வோம்.

நாம் பாவிகளாக இருப்போமானால், அவிசுவாசிகள் என்னும் பெரிய சரீரத்துடன் இருக்கத்தக்கதாக நாம் செல்வோம்; நம்முடைய பங்கு அங்கே நரகத்தில் மாய்மாலக்காரர்கள் இன்னும் மற்றவர்களுடன் இருக்கும்

என்றும் தேவன் கூறியுள்ளார். ஆமென்!

# நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பாவியும் பக்தியில்லாதவனும் எங்கே நிற்பார்கள்?

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 60-12-04E பத்மு தீவு தரிசனம்

201. அனலுமின்றி குளிருமின்றி வெதுவெதுப்பாயிருக்கும் சபையே, உன்னிடம் நான் பேசுகிறேன், உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்.

பத்துக் கன்னியர் கர்த்தரைச் சந்திக்க புறப்பட்டுச் சென்றனர்.

அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்து பேர்கள் புத்தியில்லாதவர்களுமாயிருந்தனர்; அது ஒட்டுச் சேர்க்கப்பட்ட மரமாயுள்ளது. இன்று காலையில் அதைக் குறித்துப் பார்த்தோம்.

அவர்கள் தேவனைச் சந்திக்க வெளியே புறப்பட்டுச் செல்கையில், இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள்.... இப்பொழுது கவனியுங்கள், புத்தகங்கள் திறக்கப்பட்டன” என்று வேதம் கூறுகிறது. தானியேல் 7:9ல் “புஸ்தகங்கள் திறக்கப்பட்டது””. அது பாவிகளைப் பற்றி கூறும் புத்தகமாகும். “வேறொரு புத்தகமும் திறக்கப்பட்டது” அவருடன் வந்தது யார்? எடுத்துக் கொள்ளப்பட்ட அவருடைய சபை வந்தது. ”ஓ! “ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள், கோடாகோடி பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்”

அவருடைய மனைவியாகிய மணவாட்டி தான் அது. ஓ, மகிமை! அவருடைய மனைவியாகிய சபை அவருடன் வந்தாள்.

202. நியாயசங்கம் உட்கார்ந்தது. புத்தகங்கள் திறக்கப்பட்டன. வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அது தானே புத்தியில்லாத நித்திரை செய்த கன்னியரைப் பற்றியது, ஒவ்வொரு மனிதனும் அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே நியாயந்தீர்க்கப்பட்டான்.

நீங்கள் ஏன் அதைச் செய்யவில்லை என்று கேட்கப்படுவீர்கள், அதற்கு பிறகு, என்ன?

நீங்கள் இப்பொழுது இதை மிகவும் நன்றாக அறிந்து கொண்டு வீட்டீர்கள்.

இதற்கு முன்பாக அறிந்திருக்க மாட்டீர்கள், ஆனால் இப்பொழுது அறிவீர்கள்.

நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பாவியும் பக்தியில்லாதவனும் எங்கே நிற்பார்கள்?

புறக்கணிக்கிறவன், இதைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டே, அதைப் புறக்கணிக்கிறான். அவர்கள் எங்கே வந்து நிற்பார்கள்?

அவரது பாதங்கள் வெண்கலம் போன்று பிரகாசித்தது, அது தெய்வீக நியாயத்தீர்ப்பை எடுத்துரைக்கிறது.

# இவர்கள் மறுபடியும் பிறந்து பரிசுத்த ஆவியைப் பெறாமலேயே பரலோகம் செல்ல முயல்கின்றனர்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 62-09-09E அவருடைய சமுகத்தில்

24. நாம் ஏசாயாவைக் காண்கிறோம்.

இப்பொழுது நாம் படித்த வேதபாகத்தில் ஏசாயா 6:5ல்; இவன் ஒரு பெரிய வல்லமையுள்ள தீர்க்கதரிசி, வேதத்திலுள்ள மிகப் பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவன், வேதாகமத்தில் அறுபத்தாறு புத்தகங்கள் உள்ளன.

ஏசாயா ஆதியாகமத்தில் தொடங்கி, நடுவில் புதிய ஏற்பாட்டின் சம்பவங்களைக் கொண்டு வந்து, ஆயிரம் வருட அரசாட்சியில் முடிக்கிறான் – அப்படியே ஆதியாகமம், புதிய ஏற்பாடு, வெளிப்படுத்தின விசேஷம். பரிபூரணமானது !

ஏசாயா முக்கிய தீர்க்கதரிசிகளில் ஒருவன்.

அவன் அந்த ராஜா உசியாவின் கரங்களில் சார்ந்திருந்தான். உசியா அவனை விட்டு எடுக்கப்பட்ட போது, அவன் சோர்வடைந்தான்.

அவன் மிகவும் நல்லவன், நீதியுள்ளவன், அந்த நீதியுள்ள ராஜா (நல்ல ராஜா) அவனை பரிசுத்த மனிதனாகக் கருதி, அவனுடைய தேவாலயத்தில் அவனை வைத்திருந்தான்.

25. ஏசாயா தரிசனங்கள் கண்டான். அவன் ஒரு தீர்க்கதரிசி. அவன் வார்த்தையைப் பிரசங்கித்தான். அவன் ஒரு ஊழியக்காரன், அவன் பரிசுத்த மனிதன்.

ஆனால் ஒரு நாள் அவன் தேவாலயத்தில் நின்று கொண்டிருந்தபோது

ஆவிக்குள்ளாகி தேவனுடைய மகிமையைக் கண்டான்.

தேவதூதர்கள் தங்கள் இரண்டு செட்டைகளால் தங்கள் முகத்தை மூடி, தங்கள் இரண்டு செட்டைகளால் தங்கள் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து, "சேனைகளின் கர்த்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று ஆர்ப்பரிப்பதை அவன் கண்டான்.

அப்பொழுது அந்த தீர்க்கதரிசி, தான் ஒன்றுமற்றவன் என்பதை உணர்ந்தான்.

அவன், “ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்” என்றான்.

ஒரு தீர்க்கதரிசி, வேதத்திலுள்ள மிகவும் வல்லமையுள்ள தீர்க்கதரிகளில் ஒருவன், “நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன். தேவனுடைய மகிமையை என் கண்கள் கண்டதே, ஆகையால் ஐயோ! நான் அதமானேன்” என்றான்.

26. அந்த தேவதூதன் சத்தமிட்டபோது தேவாலயத்தின் நிலைக்கால்கள் அசைந்தன என்று அவன் கூறுகிறான்.

சகோதரனே, அது உன்னை நடுங்கச் செய்ய வேண்டும்!

தேவாலயத்தின் நிலைக்கால்கள் மாத்திரம் அசையப் போவதில்லை, வானம் பூமி முழுவதும், அவர் மறுபடியும் வரும்போது, அசையப் போகின்றன.

மலைகள் ஓடிப்போம், சமுத்திரம் மறைந்துபோம்.

சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய

முகத்தினின்று எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்” என்னும் அலறுதல் உண்டாகும்.

அது ஒரு பயங்கரமான நேரமாயிருக்கும்.

பாவியாகிய நண்பனே, அதை சிந்தித்துப் பார்ப்பது நலமென்று உனக்குச் சொல்லுகிறேன். அது உண்மை.

ஏசாயா, “ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்தமான ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன், இவர்களுக்கு அசுத்த உதடுகள் உள்ளன” என்றான்.

27. **இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள், அப்படிப்பட்ட பரிசுத்த மனிதர் தேவனுடைய சமுகத்தில் தங்களைப் "பாவிகளாக" கருதினபோது, பாவியும் தேவ பக்தியில்லாதவர்களும் அந்நாளில் என்ன செய்வார்கள்?**

கூட்டங்களில் உட்கார்ந்திருக்கும் ஜனங்கள் அந்நாளில் என்ன செய்வார்கள்?

தேவனுடைய வல்லமையைக் கண்டு, வார்த்தையின் இறங்கு வரிசை எண்ணிக்கையை கேட்டு, தேவன் தம்மை

வெளிப்படுத்துவதைக் கண்டு, எவ்வித சந்தேகமுமின்றி தேவனுடைய வார்த்தை நிறைவேறினதைக் கண்ட ஜனங்கள் அந்நாளில் என்ன செய்வார்கள்?

**இவர்கள் மறுபடியும் பிறந்து பரிசுத்த ஆவியைப் பெறாமலேயே பரலோகம் செல்ல முயல்கின்றனர்.**

**"நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தி இல்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?" என்று வேதம் கூறுகிறது.**

நமக்கு முன்னால் தேவன் தம்மை வெளிப்படுத்தினதையும் தேவனுடைய மகிமையையும், வார்த்தையை ஆதாரமாகக் கொண்ட அக்காலத்து தீர்க்கதரிகளும் ஞானதிருஷ்டிக்காரரும் கண்ட விதமாகவே நாமும் கண்டு அவர்கள் அழுது முகங்குப்புறவிழுந்து, “நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்” என்று அலறினர் என்றால், நாம் எந்த நிலையில் இருக்கப் போகிறோம்?

**தன் பாவங்களை அறிக்கையிடவும் மனமில்லாத**

**ஒரு மனிதனின் கதி அந்நாளில் என்னவாயிருக்கும்?**

தன் பாவங்களை அறிக்கையிட மனமில்லாத வாலிபனின் அல்லது வாலிபப் பெண்ணின் கதி என்னவாயிருக்கும்?

தேவனுடைய சிருஷ்டிப்பைக் குறித்து தேவனைக் காட்டிலும் தனக்கு அதிகம் தெரியுமென்று நினைத்துக் கொண்டிருக்கிற இருதயக் கடினமுள்ள மனிதனின் கதி என்னவாயிருக்கும்?

வேதம் தவறென்று நிரூபிக்க தன் வாழ்நாள் முழுவதும்

**செலவிட்ட அந்த மனிதன் எங்கே நிற்பான்? அதை சிந்தித்துப் பாருங்கள்!**

28. இது சுவிசேஷகம். ஜனங்கள் அசைக்க வேண்டிய நேரம் இதுவே, ஒரு நேரம் வரும் என்று தேவன் சொன்ன நேரம் இதுவே. அவர் ஒரு காலத்தில் சீனாய் மலையை அசைத்தார், ஒரு அசைத்தல் மறுபடியும் வருகிறது. அப்பொழுது அவர் சீனாய் மலையை மட்டுமல்ல, அசைக்க முடியும் எல்லாவற்றையும் அசைப்பார், அந்த வேத வசனத்தின் எஞ்சிய பாகத்தை கவனித்தீர்களா? "ஆனால் நாமோ

அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறோம்" அல்லேலூயா !

வானங்கள் அசையும், பூமி அசையும்.

"வானமும் பூமியும் ஒழிந்து போகும், ஆனால் அந்த வார்த்தையோ ஒருக்காலும் ஒழிந்து போவதில்லை. இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை".

அசைக்க முடியும் ஒவ்வொன்றும் அசைக்கப்படும். ஆனால் நாமோ ஒரு ராஜ்யத்தைப் பெறுகிறோம். அது தேவனுடைய

வார்த்தையே. தேவனே தமது வார்த்தையாயிருக்கிறார். அவர் தம்மை அசைத்துக் கொள்வதில்லை. ஆமென்! ஓ, என்னே!

"நாமோ அசைவில்லாத ஒரு ராஜ்யத்தைப் பெறுகிறோம்". அது அசைக்கப்பட முடியாதென்று எபிரெயர் நிரூபத்தை எழுதின பவுல் கூறுகிறான்.

“ஏனெனில், ஒரே தரம் மரிப்பதும், அதற்கு பிறகு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது”



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 59-12-20M தேவனோடு சேர்ந்துரையாடல்

**54.** இப்பொழுது, முடிக்கையில் இதை நான் கூறுகிறேன் நண்பனே. இந்த காலை வேளையில் நீயும் ஒரு சேர்ந்துரையாடலில் இருக்கின்றாய். நீ இருக்கிறாய். உன்னுடைய காரியம் பரிந்து பேசப்படத்தக்கதாக தயாராக இருக்கின்றது. உன்னுடைய – உன்னுடைய வியாதியின் காரியம் இரக்கமுள்ள தேவனுக்கு முன்பாக பரிந்து

பேசப்படத்தக்கதாக தயாராக இருக்கின்றது. உன்னுடைய பாவ காரியமானது இரக்கமுள்ள தேவனுக்கு முன்பாக பரிந்து பேசப்படத்தக்கதாக தயாராக உள்ளது, ஆகவே அதை நீ ஏற்றுக் கொள்ளும்படி நிச்சயமுடையவனாக இரு.

நான் உங்களுக்கு கூறட்டும், நடைபெறப் போகின்ற கடைசி சேர்ந்துரையாடலைக் குறித்து நான் பேசப்போகின்றேன். தேவன் இரக்கமுள்ளவராய் இருப்பாராக. அங்கே நிற்கத்தக்கதாக ஒரேயொரு காரியம் தான் இருக்கும்;

ஒப்புரவாகுதல். அதுதான் நியாயத்தீர்ப்பு. நீ எப்படி ஒப்புரவாக்கப்படுவாய் என்றால் நீ உன்னுடைய மன்னிப்பாக இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை ஏற்றுக்கொண்டு அவருடைய ஆவியினால் நிரப்பப்படும்போது மாத்திரமே.

ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு ஸ்திரீயும், ஒவ்வொரு குழந்தையும் சந்தித்துக்கொள்ளும் ஒரு சேர்ந்துரையாடல் உண்டு. அந்த சேர்ந்துரையாடல் நடத்தப்பட ஒரு தெரிந்தெடுக்கப்பட்ட இடம் இருக்கின்றது, அங்கே ஒரு

மகத்தான வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு அமைக்கப்படும். தம்முடைய தீர்க்கதரிசிகள் அதைக் காணத்தக்கதாக தேவன் அனுமதித்தார், “புஸ்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகம் திறக்கப்பட்டது. ஆயிரமாயிரம் ஊழியக்காரர்கள், தூதர்கள் அவருக்கு சேவை செய்தனர்.” “நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே போவான்?” என்று இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

அந்த சேர்ந்துரையாடலில் உன் நிலை என்னவாயிருக்கும்? உன்னுடைய ஜீவியத்தில் அவைகள் எல்லாவற்றையும் நீ தவிர்த்திருக்கலாம். இந்த காலை வேளையில் நீ இந்த கதவைக் கடந்து வெளியேறி இந்த காரியத்தை அசட்டை செய்யலாம். ஆனால், என் நண்பனே, அந்த காரியத்தை உன்னால் தவிர்க்கவே முடியாது. நீ அங்கே இருக்கத்தான் போகின்றாய். “ஏனெனில், ஒரே தரம் மரிப்பதும், அதற்கு பிறகு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.”

நாமெல்லாரும் ஒன்றாக

நிற்கும்படியான, ஒரு மகத்தான சேர்ந்துரையாடல் உண்டாயிருக்கும். இக்காலை நடைபெற்ற, இந்த காலை வேளையில் நாம் நடத்திய இந்த பூமிக்குரிய சேர்ந்துரையாடலைக் குறித்து நாம் கணக்கொப்புவிப்போம்.



Bro. Branham:

~~~~~~~~

இருப்பதிலேயே மகத்தான நாள் ஒன்று இருக்கும் என்று நாம் சிந்திப்போமானால், அது நாம் வீட்டுக்குத் திரும்பிச் செல்லக்கூடிய எடுத்துக் கொள்ளப்படும் நாள் (Rapture) ஆகும். அது ஒரு அருமையான நாளாக இருக்காதா?

~~~~~~~~

செய்தி: எதிர்பார்ப்புகள், 54-0228A

நாமும்கூட ஏதோ ஒன்று நிகழப் போகின்றது என்று அறிந்திருக்கிறோம். கர்த்தருடைய வருகை சடுதியாக இருக்குமென்று (மணவாட்டி) இரகசியமாக எடுத்துக் கொள்ளப்படுவாள் என்றும் ஞாபகமிருக்கட்டும். அவர் இரவில் திருடன் வருகிற விதமாய் வந்து அவளைக் கொண்டு செல்வார். நமது குடும்பத்தின் அங்கத்தினர் திடீரென்று சென்று விட்டனர்; நாம் கைவிடப்பட்டோம் என்று நினைக்கும்போது! அது நம்மை பதறச் செய்ய வேண்டும். தேவனுடைய கிருபையினால் நாம் கைவிடப்படுவதில்லை. ஆண்டவரே, எனக்கு விருப்பமில்லாதது ஏதாவது ஒன்றிருக்குமாயின், அது கைவிடப்படுதலேயாகும்... என்னைக் கைவிடாதேயும், ஆண்டவரே.

Bro.Branham





**சகோ. பினேகாஸ்**

**போன்: 8838623242, 9551855108**

Email: jebakumarsa@gmail.com

www.thefinish.in

